## இலங்கை நீதிபதிகள் நிறுவகம் 2010

------------------------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட உயர்ந்தபட்ச தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை நீதிபதிகள் நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய கணக்கேடுகளைப் பேணியிருந்தது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

1985 இன் 46 ஆம் இலக்க இலங்கை நீதிபதிகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதி ஆண்டிற்கான கணக்குகள் அந்நிதியாண்டு முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் 2011 மே 05 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் | |
| (i) | நி.பி 135 | நிதிசார் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி 452 (i) | கணக்காய்வு ஐயவினாக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி 756 மற்றும் 757 | வருடாந்த பொருள் மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டு மெய்மையாய்வு அறிக்கையின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iv) | நி.பி 880 மற்றும் 881 | பிணை வைப்புச்செய்ய வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.2 ஆம் பிரிவு | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் அமைப்பு வரைபடம் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்படாமை மற்றும் விரிவான தகவல்களை உள்ளடக்கிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகள் இல்லாமை. |
| (இ) | 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 61/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபத்தின் 6.1 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது நிறுவகத்தின் செயற்பாடுகளிலிருந்து மிகை ரூபா 1,135,490 ஆக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,099,817 ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகள் ரூபா 35,673 ஆல் அதிகரிப்பு ஒன்றைச் சுட்டிக் காட்டியுள்ளது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 செயலாற்றல்

நிறுவகத்தின் பதவியணியினர் 5 நபர்களாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மொத்த மீண்டுவரும் செலவு ரூபா 6,503,141 ஆக இருந்தது. நீதிபதிகளைப் பயிற்றுவிக்கும் 17 நிகழ்ச்சித் திட்டங்களும் 33 கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டிருந்தன.

#### 2.2.2 கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிதி அதிகாரங்களை ஒப்படைத்தல்
(ஆ) கொடுப்பனவுகளை அங்கீகரித்தல்
(இ) பொருள் மெய்மையாய்வு